# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1973/4 - 2016 ජූනි මස 27 වැනි සඳුදා - 2016.06.27

1973/4 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/KGK/4/2/2011/02/26.

காணி அமைச்சின் தொடர்பு இல.: 4-3/9/2012/WS/108.

ஒரு பகிரகங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்வரும் காணியை எடுத்துக்கொள்ள ஆட்சியாளர் எண்ணியிருக்கின்றார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கிறேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் கண்டி, கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் விலகம்மெத்த கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் அதிபதியால் அளந்து தயார் செய்யப்பட்ட 2016.05.04 ஆம் திகதியிட்ட கடத்திரல் வரைபட இல. 320390, வலயம் 4 இன் 2 ஆம் இல. 222, 223 எனக் காட்டப்பட்டுள்ள " வேமுல்ல வத்த'' என அழைக்கப்படும் காணியின் மொத்த விஸ்தீரணத்தில் 0.0158 ஹெக்டயர் அளவுடைய கீழ்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள இரண்டு காணித்துண்டுகள்:-

1. துண்டு இல. 222
காணியின் பெயர்: வேமுல்ல வத்த; விஸ்தீரணம்: 0.0030 ஹெக்டயார்.

*எல்லைகள்:-*
வடக்கு: துண்டு இல. 208 உம் 212 உம்; கிழக்கு: துண்டு இல. 223 உம் 224 உம்; தெற்கு: துண்டு இல. 224; மேற்கு: துண்டு இல. 224 உம் 210 உம்.

உரிமை கோருவோர் பெயரும் முகவரியும்
1. திரு. எஸ். தாபரே, இல. 339/6, வேமுல்ல வத்த, அம்பிடிய.

2. துண்டு இல. 223
காணியின் பெயர்: வேமுல்ல வத்த; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்.

*எல்லைகள்:-*
வடக்கு: துண்டு இல. 212 ; கிழக்கு: துண்டு இல. 224 உம்; தெற்கு: துண்டு இல. 224; மேற்கு: துண்டு இல. 222 உம் 208 உம்.

உரிமை கோருவோர் பெயரும் முகவரியும்
1. திரு. சீ. கே. டீ. விதானகே, இல. 339-4, வேமுல்ல வத்த, அம்பிடிய.

மேற்குறித்த காணிக்கு உரித்து பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியகாரர் மூலமாக 2016 ஓகத்து மாதம் 30 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கண்டி, கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் என் முகதாவில் சமுகமளித்தல்

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வேண்டுமென்றும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஓகத்து மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தல் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். காணி உரிமையுடன் தொடர்புடைய காணிஉறுதி, தொடர்புடைய எழுத்தாவணங்களையும் காணி விசாரணையின்போது முன்வைத்தல் வேண்டும்.

பி. எம்.பீ. ஜீ. பீ. வீ. பண்டார,
பிரதேச செயலாளர்,
கண்டி, கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி, கங்கவட்ட கோரளை,
2016, யூன் 21.

7 - 541

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: நுவ3/1/8/கா.எ./150.

காணி அமைச்சின் இல.: 4-3/9/2012/WS/376.

இல. 1957/2 மற்றும் 2016.03.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் 1 ஏ பக்கத்தில் 2 ஆது பந்தியில் விஸ்தீரணம் ஹெக்ரடயார் 64.5677 க்கு பதிலாக ஹெக்டயார் 0.1276 என இத்தால் திருத்தம் செய்வதுடன் தொடர் இல. 2 இலுள்ள விபரங்களையும் இத்தால் நீக்குகிறேன்.

எஸ். பீ. கே. போதிமான்ன,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா..

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2016, யூன் 16.

7 - 542

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.